பக்கங்கள் - 07

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

மின்னிதழ்

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 13 வியாழக்கிழமை (27.05.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 159

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
021 720 1005
இல.44,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## யாழில் ட்ரோன் கமரா கண்காணிப்பில்



### 10 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் நேற்றைய தினம் விமானப் படை மற்றும் யாழ்ப் பாணப் பொலிஸார் இணைந்து ட்ரோன் கமரா பயன்படுத்தி யாழ். நகரப் பகுதிகளில் பொதுமக்களின் நடமாட்டத்தை கண்காணித்த லில் பத்து பேர் கைது செய்யப்பட் டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தெரி வித்தார்.

02

## கிளிநொச்சியில் 13 தொற்றாளர்கள் அடையாளம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 13

02

48ஆவது புதிய சட்டமா அதிபராக

## சஞ்சய் ராஜரத்னம் நேற்று பதவிப் பிரமாணம்



(கொழும்பு)

புதிய சட்டமா அதிபராக ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சய் ராஜரத்னம் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலு வலகத்தில் ஜனா திபதி கோட்டா

02

## கொரோனா 28 பேர் மரணம்

(கொழும்பு)

நாட்டில் மேலும் 28 பேர் கொரோனாவைரஸ் தொற் றினால்

02

# நடமாடும் வியாபாரத்துக்கு யாழ்.மாவட்டத்தில் அனுமதி

## கிராமசேவகர் ஊடாக பிரதேச செயலகங்களில் அனுமதி பெறலாம்

*(யாழ்ப்பாணம்)*

***யாழ்.மாவட்டத்தில் பயணக் கட்டுப்பாடு அமுலில் உள்ள நிலையில் மக்களுடைய நன்மைகருதி நடமாடும் வியாபார நட வடிக்கையில் ஈடுபடுவதற்கான அனுமதியை கிராமசேவகர் ஊடாக பிரதேச செயலகங் களிடமிருந்து பெறலாம் என யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.***

*(02ஆம் பக்கம் பார்க்க)*




திடீர் காய்ச்சல்

## உடுப்பிட்டியில் 6 வயது சிறுவன் உயிரிழப்பு



02

வெளிநாட்டுப் பயணிகளுக்கான

## தற்காலிகத் தடை ஜூன் முதல் நீக்கம்

(கொழும்பு)

இலங்கை வரும் வெளிநாட் டுப் பயணிகளுக்கான தற்காலிகத் தடை ஜூன் முதலாம் திகதி தொடக்கம் நீக்கப்படும் என்று சிவில் விமான சேவைகள் அதி கார சபை தெரிவித்துள்ளது.

எனினும் இந்தியாவிலிருந்து நாடு திரும்புவோருக் கான கட்டுப்பாடு

02

## யாழ்.அரச பணியாளர்களுக்கு விரைவில் கொரோனா தடுப்பூசி

### மாவட்ட அரச அதிபர் க.மகேசன்



(யாழ்ப்பாணம்)

யாழில் அரச பணியாளர்களுக்கு விரைவில் கொரோனாத் தடுப்பூசி வழுங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தாக யாழ்.மாவட்ட அரசாங்க அதி பர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று புதன்கிழமை நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்

02

## வடக்கில் 4 இலட்சம் பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்த வேண்டும்

### வடக்கு சுகாதார சேவைகள் திணைக்களம் அரசிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் 4 இலட்சம் பேருக்குக் கோவிட் தடுப் பூசிகள் செலுத்தப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தால் கோரிக்கை முன்வைக்கப்பட் டுள்ளது.

தடுப்பூசிகள் வழுங்கப்பட்டால் அவை இரண்டு வாரங்களுக்குள் வடக்கு மக்களுக்குச் செலுத்தி முடிக்கக்கூடியதாக இருக்கும் என்றும் சுகாதார சேவைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, சுகாதார முன் களப் பணியாளர்களுக்கு அஸ்ரா செனெகா தடுப்பூசியின் முதலாவது டோஸ்

02

## கடந்த 20ஆம் திகதி முதல் 221 கோவிட் மரணங்கள்

### 54 பேர் வீடுகளில் இறப்பு

(கொழும்பு)

கோவிட் - 19 நோய் காரண மாக வீடுகளிலேயே மரணிக் கின்றவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரிக்கிறது.

கடந்த 20ஆம் திகதி முதல் இதுவரையில் பதிவான 221 கோவிட் மரணங்களில், 54 மரணங்கள் வீடுகளிலேயே இடம் பெற்றுள்ளன.

அவர்களில் 22 பேரின் மரணங்கள் கடந்த இரு தினங் களில் பதிவாகியுள் ளன.

02

## 28 பேர்...

பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றினால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 271 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## சஞ்சய்...

பய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் 34 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள ராஜரத்னம், அரசாங்கத்தின் சிரேஷ்ட சட்டத்தரணியாகவும் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல், மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல், சிரேஷ்ட மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் மற்றும் பதில் சொலிஸிட்டர் ஜெனரலாக பதவி வகித்துள்ளார்.

கொழும்பு புனித பீற்றர் கல்லூரி, றோயல் கல்லூரிகளில் கல்வி கற்றுள்ள அவர், லண்டனில் உள்ள குயின்மேரி பல்கலைக்கழகத்தில் சட்ட முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளார். ராஜரத்னம் இங்கிலாந்து மற்றும் வேல்ஸின் சொலிஸிட்டராவார்.

அவர் 2014ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதி சட்டத்தரணியாக பதவிப் பிரமாணம் செய்தார்.

சிவில் மற்றும் குற்றவியல் சட்டத்துறை குறித்து விரிவான அனுபவத்தை பெற்றுள்ள அவர், நீண்டகாலமாக உயர் நீதிமன்றங்களில் ஆஜராகியுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் நிதி புலனாய்வுப் பிரிவு உள்ளிட்ட சில அரசாங்க நிறுவனங்களில் ஆலோசகர் பதவியை வகித்துள்ள அவர், இலங்கை சட்ட ஆணைக்குழு, சட்டக் கல்விப் பேரவை ஆகியவற்றின் உறுப்பினராவார்.

பதவிப்பிரமாண நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தரவும் பிரசன்னமாகியிருந்தார். (ம-3)

## உடுப்பிட்டியில்...

திடீர் காய்ச்சல் காரணமாக உடுப்பிட்டியில் 6 வயது சிறுவன் உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவத்தில் உடுப்பிட்டி நாவலடியைச் சேர்ந்த பஜிர்தன் சப்திகன் (வயது-6) என்ற உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் தரம் ஒன்றில் பயிலும் மாணவனே உயிரிழந்துள்ளான்.

சிறுவனுக்கு கடந்த மூன்று நாட்களாக காய்ச்சலுடன் கடும் உடல் சோர்வு காணப்பட்டுள்ளது. அதனால் அவர் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எனினும் அவர் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

சிறுவனின் உயிரிழப்புக்கு காய்ச்சல் காரணம் என மருத்துவக் குறிப்பு வழங்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மரண விசாரணைகளை முன்னெடுத்த திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார், சிறுவனின் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு பின் உறவினர்களிடம் ஒப்படைக்க பணித்துள்ளார். (ம-3,33,60)

## யாழ்.அரச பணி...

தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் சமல் ராஜபக்ஷவிடம் யாழ்.மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அனைத்து அரச ஊழியர்களுக்கும் தடுப்பூசி வழங்க வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய கடிதம் சுகாதார அமைச்சு மற்றும் உள்நாட்டு அமைச்சுக்கு எம்மால் அனுப்பப்பட்டிருந்தது.

எனவே, உள்நாட்டு அமைச்சின் ஆளுகையின் கீழ் உள்ள மாவட்டச் செயலகம் உட்பட அனைத்துப் பிரதேச செயலகங்கள் மற்றும் அனைத்துத் திணைக்களங்களிலும் கடமை புரிகின்ற அரச உத்தியோகத்தர்களுடைய எண்ணிக்கையை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு கோரிப் பெற்றிருக்கின்றது.

யாழ்.மாவட்டத்தில் சுமார் 3,200 அரச பணியாளர்களிற்கு தடுப்பூசி வழங்கப்பட வேண்டும் என எம்மால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் உள்ளூராட்சி அமைச்சு, உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரங்களைப் பெற்றுள்ளது.

எனவே, அரச பணிகளில் ஈடுபடும் குறிப்பிட்ட ஒரு பகுதியினருக்கு மிக விரைவில் தடுப்பூசி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் கூறியுள்ளார். (ம-3,18,33,101)

## தற்காலிகத்...

தொடரும் என்றும் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இலங்கை வரும் வெளிநாட்டுப் பயணிகளுக்கு கடந்த வாரம் தொடக்கம் வரும் மே 31ஆம் திகதிவரை இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## நடமாடும்...

சமகால நிலைமைகள் குறித்து நேற்று மாலை ஊடகங்களை சந்தித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இதன்போது மேலும் அவர் கூறுகையில்,

யாழ்.மாவட்டம் முழுவதும் கொரோனா அபாயம் நீடித்துவரும் நிலையில் மக்களின் நலனை கருத்தில் கொண்டு மிக இறுக்கமான பயணத்தடை அமுல்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் மக்களின் நலனை கருத்தில் கொண்டு நடமாடும் வியாபார நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

குறிப்பாக மரக்கறி, கடலுணவு மற்றும் பலசரக்கு பொருட்கள், வெதுப்பக உற்பத்திகள், மருந்து வகைகளை வீடுகளுக்கே சென்று மக்களுக்கு வழங்கும் வகையில் அனுமதிகளை வழங்குமாறு பிரதேச செயலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

எனவே வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவோர் தமது பகுதி கிராமசேவகர்கள் ஊடாக பிரதேச செயலரின் அனுமதியை பெற்று நடமாடும் வியாபாரத்தை மேற்கொள்ள முடியும் என மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார். (ம-3,18,33)

## வடக்கில் 4 இலட்...

கடந்த ஜனவரி மாத இறுதியில் ஏற்றப்பட்டது. அவர்களுக்கு இரண்டாவது தடுப்பூசி தற்போது ஏற்றப்பட்டு வருகின்றது.

வடக்கு மாகாணத்தில் முதலாவது டோஸைப் பெற்ற 500 பேர் வரையில் இரண்டாவது டோஸைப் பெறவில்லை. அவர்களில் பலர் தமக்கு தடுப்பூசி தேவையில்லை என்று தெரிவித்துவருவதால், அவர்களிடம் விளக்கம் கோருவதற்கும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது எனத் தெரியவருகின்றது.

அஸ்ராசெனெகா தடுப்பூசி எதிர்வரும் 14ஆம் திகதியுடன் காலாவதியாவதால் அதனைத் திருப்பி கொழும்புக்கு அனுப்ப வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

அதன் காரணமாகவே முதலாவது டோஸ் பெற்று இரண்டாவது டோஸை இதுவரை பெறாதவர்கள் தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளது. (ம-3)

### சீனாவின் கொரோனா தடுப்பூசியை

# செலுத்தும் நடவடிக்கையை உடன் ஆரம்பிக்குக

## ஜனாதிபதி கோட்டா பணிப்பு

(கொழும்பு)

சீன அரசாங்கத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ள 5 இலட்சம் இரண்டாவது தொகுதி "சினோபார்ம்" தடுப்பூசிகளை ஏற்றும் நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை வழங்கியுள்ளார்.

அந்த வகையில் சுகாதார துறைகளின் பரிந்துரைகளுக்கு முன்னுரிமை அளித்து, நாட்டின் சில மாவட்டங்களுக்கு தடுப்பூசிகளை விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சீனாவிலிருந்து 5 இலட்சம் தடுப்பூசிகளுடன் இலங்கை விமான சேவைக்கு சொந்தமான யு.எல்.869 விமானம் நேற்று அதிகாலை 12.05க்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

இலங்கைக்கான சீன தூதுவர் ஷீ சென் ஹொன் (Qi Zhen Hon) சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சியிடம் தடுப்பூசிகளை உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சீன அரசாங்கத்துடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பெறுபேறாக இந்த இரண்டாவது தடுப்பூசிகள் தொகுதி இலங்கைக்கு அன்பளிப்பாக கிடைத்துள்ளன.

அரசாங்கம் கொள்வனவு செய்வதற்காக கோரியுள்ள மேலும் 2 மில்லியன் தடுப்பூசிகளை இன்னுமொரு மாதத்திற்குள் வழங்கவும் அத்தியாவசிய மருத்துவ உபகரணங்களை அன்பளிப்பு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளதாக சீனத் தூதுவர் குறிப்பிட்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன, இலங்கைக்கும் சீனாவுக்குமிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பயனாக "சினோவாக்" (Sinovac) தடுப்பூசிகளை இலங்கையிலேயே உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் இரண்டு மாதங்களில் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டார். (ம-3)

## யாழில் ட்ரோன்...

நேற்றுக் காலை யாழ்.நகரம், நல்லூர், அரியாலை, குருநகர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ட்ரோன் கமரா கண் காணிப்பின்போதே 10இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் சிலர் எச்சரிக்கை செய்து விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் சிலருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டோரில் சிலர் முகக்கவசம் அணியாது வீதியில் நின்றமை மேலும் சிலர் பயணத்தடை கட்டுப்பாடுகளை மீறி வீதியில் பயணித்தமை போன்ற குற்றச்சாட்டுக்காக கைது செய்யப்பட்டதாக தெரிவித்தார். (ம-3,18,33)

## கிளிநொச்சியில்...

கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 159 பேர் சிகிச்சை பெற்று வருவதாக மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் 13 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 159 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் இதுவரை கிளிநொச்சி மாவட்டத்தில் 513 பேர் தொற்றாளர்களாக இதுவரையில் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் 1,469 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தனிமைப்படுத்தலில் உள்ளவர்களிற்கான உலருணவு பொருட்களை வழங்கும் செயற்பாடுகளை பிரதேச செயலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ம-3,100,316,350)

## யாழில் திருட முற்பட்டவர்கள் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

பயணத் தடை வேளையில் யாழ்.நகரில் இயங்கும் பிரபல மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையத்தில் திருட முயன்றவர்கள் பொலிஸாரை கண்டதும் தப்பி ஓடும்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.நகரில் இயங்கும் பிரபல மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையத்தின் பின்பகுதியினால் இறங்கி தண்ணீர்மோட்டரையும் வாகன உதிரிப்பாகங்களையும் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் செயற்படும் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலின்படி பயணத் தடை வேளையில் மூடப்பட்டிருந்த கடையின் பின்புறமாக இறங்கி திருட்டில் ஈடுபட முயன்ற குற்றச்சாட்டில் பொற்பதி, நாவாந்துறையை சேர்ந்த இருவர் பொலிஸாரை கண்டு ஓடும்போது மாவட்ட குற்ற தடுப்பு பிரிவினரால் மடக்கி பிடிக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ளவர்களிடம் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணையினை மேற்கொண்டுள்ளனர். (ம-3,33)

## கடந்த 20ஆம்...

இதேவேளை மக்கள் சரியான முறையில் சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றி செயற்பட்டால், அடுத்த சில வாரங்களுள் கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் குறைவு ஏற்படும் என, பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

தற்போது கோவிட் நோயாளர்களது எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது.

புத்தாண்டு காலப்பகுதியிலும் அதன் பின்னரும் சரியான முறையில் சுகாதார அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படாமையே இதற்கான காரணமாகும்.

இந்நிலையில் மக்கள் சரியாக நடந்து கொண்டால் சில வாரங்களில் நோய்ப் பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்று அவர் கூறியுள்ளார். (ம-3)

உணர்ச்சி வேகத்தில் அறிவாளியும் மடையன் ஆகிவிடுவான்.

– காரவான்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பழக்க தோசத்தை தவிர்த்து நடவுங்கள்!

ஒரு கிராமத்தில் கோவலன் – கண்ணகி என்ற நாடகத்தை அரங்கேற்றினார்கள்.

அந்த நாடகத்தில் கண்ணகி பாத்திரமேற்று நடிப்பதற்குப் பொருத்தமானவர் எனக் கருதி ஒருவரைத் தெரிவு செய்தனர்.

அவர் ஒரு முற்கோபி. எதற்கெடுத்தாலும் தான் உடுத்திருக்கும் சாரத்தை எடுத்து சண்டியன் கட்டுக் கட்டிக் கொள்ளும் பழக்கமுள்ளவர்.

ஒத்திகைகள் பார்க்கப்பட்டு கோவலன் – கண்ணகி என்ற நாடகம் அரங்கேற்றப்பட்டது.

பார்ப்போர் மனதை ஈர்ப்பதாக நாடகக் காட்சிகள் நகர்ந்தன.

இப்போது மன்னன் பாண்டியன் கோவலனுக்கு மரண தண்டனை நிறைவேற்றுகிறான்.

இந்தச் செய்தியை தூதர்கள் கண்ணகியிடம் எடுத்துக் கூறவேண்டும்.

திரைவிலகுகிறது. கண்ணகி தனித்திருக்கிறாள். தூதர்கள் கண்ணகியிடம் சென்று, தாயே! கோவலனைக் கொன்றுவிட்டார்கள் என்று சொல்கிறார்கள்.

உடனே கண்ணகியாக நடித்தவர், தான் கட்டியிருப்பது சேலை என்பதையும் மறந்து பழக்கதோசத்தில் சேலையை தூக்கி சண்டியன் கட்டுக் கட்டிக் கொண்டு; என் கணவனைக் கொன்றவன் யாரடா? என்று கேட்க, அரங்கம் முழுவதும் ஒரே சுவக்குரல். கைதட்டல்.

நிலைமையை உணர்ந்து கொண்ட நாடகத் தயாரிப்பாளர் திரையை மூடி சபையின் ஆர்ப்பரிப்பைத் தவிர்த்துக் கொண்டார்.

கண்ணகி பாத்திரமேற்று நடித்தவர் சேலையை தூக்கி சண்டியன் கட்டுக் கட்டியதால், நாடகம் குழம்பிப்போன கவலையில் இருந்த நாடகத் தயாரிப்பாளரை நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர் ஆற்றுப்படுத்தினார்.

என்னதான் பயிற்சி வழங்கினாலும் பழக்க தோசம் உரிய நேரத்தில் வந்துதான் ஆகும்.

எதற்கெடுத்தாலும் சண்டியன் கட்டுக் கட்டுபவரை கண்ணகி பாத்திரத்தில் நடிக்க வைத்ததால் வந்த விபரீதம்தான் இது. கவலையை விடுத்து இனிமேலாவது பொருத்தமான வருக்கு பொருத்தமான பாத்திரத்தை வழங்குங்கள் எனக் கூறினார்.

இந்தக் கதையைக் கூறும்போது இது எதற்கானதென நீங்கள் கேட்கலாம்.

இப்போது எங்கள் நாட்டில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துகின்ற பொறுப்பு இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எங்கு பார்த்தாலும் படையினர். யுத்த காலத்து உசார் நிலையில் அவர்கள் உள்ளனர்.

வீதித் தடைகள், சோதனை நடவடிக்கைகள், ஆயுதம் ஏந்திய வண்ணம் காவல் காக்கும் ஏற்பாடுகள் என எல்லாம் இராணுவ நடவடிக்கைகளுக்குரியவையாக இருக்கின்றன.

சிலவேளை பழக்கதோசத்தில் படையினர் பொதுமக்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிடுவார்களோ! என்ற ஏக்கமும் உண்டு.

எதற்கும் படையினர் தம் பழக்கதோசத்தை தவிர்த்து, தங்கள் பணியை ஆற்ற வேண்டும் என்பதுதான் நம் ஆலோசனை.

# மட்டக்களப்பில் 32 பொலிஸார் உட்பட 213 பேருக்கு கொரோனா தொற்று

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் சிறைக் கைதிகள் ஐவர் மற்றும் 32 பொலிஸார் உட்பட 213 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய கலாநிதி நாகலிங்கம் மயூரன் இத் தகவலை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்மேலும் தெரிவிக்கை யில், கடந்த 24 மணி நேரத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 213 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அவர்களில் ஐவர் சிறைக் கைதிகளாவர் எனத் தெரிவித்தார்.

அதேநேரம் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் தற்போது சிவப்பு வலயமாக காணப்படுவதனால் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டுமெனவும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் தேவையின்றி வீட்டை விட்டு வெளியேற வேண்டாம் எனவும்மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ம-3)

## முல்லையில் சட்டவிரோத கடற்தொழிலில் ஈடுபட்ட

### ▬ 9 மீனவர்கள் கைது
### ▬ 2 படகுகள் கைப்பற்றப்பட்டன

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாறு தொடக்கம்கொக்குளாய்வரையான கடற்பரப்பில் சட்டவிரோத கடற்தொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட 9 மீனவர்களைக் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர். மேலும் இரண்டு படகுகளையும் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த கடற்பரப்பில் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் கண்காணிப்பு நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கொக்குளாய், கருநாட்டுக்கேணி பகுதியினைச் சேர்ந்த 9 மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர். இவர்கள் தடை செய்யப்பட்ட சுருக்கு வலையினை பயன்படுத்தி கடற்தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் வழக்கு பதிவு செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது 9 பேருக்கும் தலா இரண்டு இலட்சம் ரூபாய் ஆட்பிணையில் செல்ல நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளது. (ம-3,281)

## கடும் காற்றுடன்கூடிய காலநிலையால்

# யாழில் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 241 ஆக உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடும் காற்றுடன்கூடிய காலநிலை தாக்கத்தின் காரணமாக 71 குடும்பங்களைச் சேர்ந்த 241 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின்உதவிப் பணிப்பாளர் என். சூரியராஜ் தெரிவித்தார்.

கடந்த 24 மணி நேரத்தில் யாழ்ப்பாணத்தில் வீசிய கடும் காற்று காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் கருத்துரைக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் கடும் காற்றுடன்கூடிய காலநிலை தாக்கத்தின் காரணமாக 71 குடும்பங்களைச் சேர்ந்த 241 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு இதில் சிறுமி ஒருவர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றார்.


கடுங்காற்றின் தாக்கம் காரணமாக வேலணைப் பிரதேசத்தில் இரண்டு வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதோடு ஏனைய பிரதேச செயலர் பிரிவில் 60 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் சிறு தொழில் முயற்சியாளர்கள் ஒன்பது பேர் காற்றின் தாக்கத்தின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பாதிப்புக்கள் தொடர்பில் அனைத்து விபரங்களும் பிரதேச செயலகங்கள் ஊடாக சேகரிக்கப்பட்டு மத்திய அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

வேலணை, காரைநகர், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் காற்றுடன்கூடிய காலநிலையினால் அதிகளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-3,18,33,101)

# சத்திய தரிசனம்

## கடவுள்மீது ஒருமுகப்பட்ட அன்புகொள்



❖ நவீன கால மாணவர்கள் விவாதத்தில் ஈடுபடுவது இயல்பென்பதால் தாம் கூறியதே சரியென்று ஒவ்வொருவரும் வாதிட்டனர். அவர்களது விவாதம் மிகவும் உரத்துவிடவே கோவில் பூசாரி அங்கே வந்து கோவிலின் அமைதியைச் சத்தமிட்டுக் குலைக்காமல் இருக்கும்படி கூறினார்.

❖ ஒரு மாணவர் அவரிடம் பண்டிட்ஜி, கோவில் சிலையின் நிறம் என்ன? என்று கேட்டார். சிலையின் நிறம் கறுப்பு. நான் தினமும் அதற்கு அபிஷேக ஆராதனைகள் செய்து ஆரத்தி எடுக்கிறேன்" என்றார்.

❖ திருப்தியடையாத மாணவர்கள் அவருடனும் வாக்குவாதம் செய்தனர். அவர்களைக் கர்ப்பக்கிரகத்துக்கு அழைத்துச் சென்ற பூசாரி அவர்களது கண்ணாடிகளை நீக்கிவிட்டுச் சிற்பத்தின் உண்மை நிறத்தைப் பார்க்கும்படி செய்தார்.

❖ அப்போது அவர்களால் சிற்பத்தின் உண்மை நிறம் கறுப்பு என்பதைப் பார்க்க முடிந்தது. அது போலவே மனிதன் உலகத்தைத் தனது சிதைந்த நோக்கில் பார்க்கிறான். அவனால் உண்மையைப் பார்க்க முடியாததுதான்.

(தொடரும்)

# 5 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் நாட்டை வந்தடைந்தன



(கொழும்பு)

சீனாவினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட மேலும் 5 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டன.

இலங்கை எயார்லைன்ஸுக்கு சொந்தமான சிறப்பு விமானம் மூலம் தடுப்பூசிகள் நேற்று காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டன.

இந்த தடுப்பூசிகளை சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

அதன்படி, இந்த ஆண்டு மார்ச் 31ஆம் திகதி 6 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகளைக் கொண்ட தொகுதி நாட்டுக்கு கொண்டுவரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6)

# தொற்றுப் பரவல் தீவிரமடைய சுகாதார அமைச்சே காரணம்

## தேரர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

கொவிட்-19 பெருந்தொற்று நாட்டில் தற்போது தீவிரமடைந்துள்ளமைக்கு சுகாதார அமைச்சின் பொறுப்பற்ற செயற்பாடுகளே மூல காரணியாக காணப்படுகிறது. ஒரு சிலரது பொறுப்பற்ற தன்மையினால் நாட்டு மக்கள் பெரும் பாதிப்பை எதிர்க்கொண்டுள்ளார்கள் என அபயராம விகாரையின் விகாராதிபதி முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

கொவிட்-19 தடுப்பூசி செலுத்தும் விவகாரம் தற்போது அரசியல் மயப்படுத்தப்பட்டு முறைகேடான முறையில் இடம்பெறுகிறது. சுகாதார தரப்பினருக்கும், பாதுகாப்பு தரப்பினருக்கும் முதலில் தடுப்பூசிகளை செலுத்துமாறு ஆரம்பத்தில் இருந்து குறிப்பிட்டோம்.

அரசாங்கம் எமது கருத்துக்களை கவனத்திற் கொள்ளவில்லை. சுகாதார சேவையாளர்களுக்கு தடுப்பூசிகளை வழங்காவிடின் பணிப்புறக்கணிப்பில் ஈடுப்படுவதாக சுகாதார சேவையாளர் சங்கத்தினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள்.

கொவிட்-19 வைரஸ் பெருந்தொற்றினை கட்டுப்படுத்தவும், பொது மக்களின் சுகாதார பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் நிலையான சிறந்த திட்டங்களை சுகாதார அமைச்சு செயற்படுத்தவில்லை. கால மாற்றத்திற்கு அமைய சுகாதார அமைச்சின் கொள்கைகளும், சுகாதார பாதுகாப்பு செயற்திட்டங்களும் மாற்றமடைந்தன. இதன் தாக்கத்தை இன்று நாட்டு மக்கள் எதிர்கொள்கிறார்கள் என குறிப்பிட்டார்.(4-6)

# கொரோனா நோயாளி தப்பியோட்டம்

(கொள்ளுப்பிட்டி)

கொள்ளுப்பிட்டியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் இருந்து கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளி ஒருவர் நேற்று முன்தினம் மாலை தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த நபர் குறித்த தகவல் அறிந்தால் அதனை வழங்குமாறு கொள்ளுப்பிட்டி பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்த நிலையிர் அவரைக் கைது செய்யும் நடவடிக்கைகளை கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6)

# குறுகிய கால முடக்கல் தொற்றாளர்களை மேலும் அதிகரிக்கும்



## மருத்துவ சங்கங்கள் கூட்டாக எச்சரிக்கை

**(கொழும்பு)**

**அடுத்தடுத்தும் இடைக்கிடையும் குறுகியகால அடிப்படையிலும் மேற்கொள்ளும் முடக்க நிலை மக்கள் ஒன்றுகூடும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துகின்றது. இத்தகைய சூழ்நிலைகளில் வேலை செய்யும் இடங்களில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமே தவிர, இவை நாட்டின் பொருளாதாரத்திற்கு எவ்வித அனுகூலங்களையும் தரப்போவதில்லை என 4 பிரதான மருத்துவ சங்கங்கள் கூட்டாக எச்சரித்துள்ளன.**

இது தொடர்பில் மேற்குறிப்பிட்ட சங்கங்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நோய் தொற்று தீவிரமாகப் பரவும் போது எந்தவொரு நாடும் கடுமை யான முடக்க நிலையை அல்லது ஊரடங்கை பிரகடனப் படுத்தாமல் தொற்றை கட்டுப் படுத்தி யதாகத் தெரியவில்லை. எனவே தொற்றை கட்டுப்படுத்த கடுமையான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டுப்பாடு விதிப்பதைத் தவிர வேறு வழியும் இல்லை.

ஒரு சில நாடுகளுக்கு மாத்திரம் நாடு தழுவிய ரீதியிலான முடக்க நிலையை அமுலாக்குவதன் மூலம் நோய் தொற்றை கட்டுப்படுத்தும் முயற் சியில் கனிசமான தாக்கத்தை ஏற்படுத்த முடியாது. என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-6)

# நாடு முழுவதும் இணைய சேவை மந்தம்



(கொழும்பு)

இலங்கையில் சமகாலத்தில் இணைய சேவை வேகத்தில் மந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக இலங்கை தகவல் தொழில்நுட்ப சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக இணையம் ஊடாக தொழில் மற்றும் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளும் நபர் கடும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக இலங்கை தகவல் தொழில்நுட்ப சங்கத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் இணைய வேகத்தை அதிகரிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்திடம், தகவல் தொழில்நுட்ப சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (4-6)

## விதிமுறை மீறியவர்களுக்கு

# தாய்லாந்து அரசின் வினோதமான தண்டனை



(தாய்பே)

தாய்லாந்து நாட்டில் தற்போது கொரோனாப் பரவல் அதிகரித்து வரும் நிலையில் அந்த நாட்டு அரசாங்கம் பல்வேறு கட்டுப்பாடுகளை அமுல்படுத்தி வருகின்றது.

இந்த நிலையில் கொரோனா விதிமுறைகளை மீறுபவர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகிறது.

அந்த வகையில் விதிமுறைகளை மீறுபவர்களுக்கு வித்தியாசமான முறையில் அந்நாட்டு இராணுவத்தினர் தண்டனை வழங்கியுள்ளனர்.

அதாவது வீதியில் சமூக இடைவெளி பேணாமல், முகக்கவசம் அணியாமை போன்ற குற்றச் செயல்களுக்காக கைது செய்பவர்களை கைகளில் விலங்கு மாட்டாது கால்களில் விலங்கு மாட்டியுள்ளனர்.

ஒரே சமயத்தில் பலரை கைது செய்து வைக்கும் அளவிற்கு மரத்தினால் உருவாக்கப்பட்ட கருவிமூலம் அவர்களுக்கு தண்டனையை வழங்கியுள்ளனர். (4-6)

# பனை மரம் வீழ்ந்து வீடு சேதம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஆனைக்கோட்டைமுருகமூர்த்தி ஆலயத்திற்கு பின்னாலுள்ள வீடொன்று பனைமரம் வீழ்ந்து சேதமடைந்துள்ளது. நேற்று முன்தினம் மாலை வீசிய கடும் காற்றினால் அருகிலுள்ள காணியுள்ள பனைமரம் முறிந்து வீழ்ந்ததனால் குறித்த வீடு சேதமடைந்தது. இதனால் வீட்டிலிருந்த பொரு ட்களும் சேதமடைந்துள்ளன. ஒரே குடும்பத்தினை சேர்ந்த நால்வர் பாதிக்கப்பட்டனர். (4-6,33,104)

# விசேட பூசை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திருநாட்டில் வாழும் மக்களும் உலகெங்கிலும் வாழும்மக்களும்கொரோனாவைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி இன்று வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம்ஆனைக்கோட்டை கண்ணகிபுரம் இராய இயேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளது.

விசேட பூசை வழிபாடுகளின் நிறைவில் தேவஸ்தான பிரதம குருக்கள் கீர்த்தனை கிரியா பூஷணம் சிவப்பிரம்மஸ்ரீ கு. கிஸ்ணராசக்குருக்கள் அவர்களின் அருளாசி உரையும் வேதபாராணமும் இடம் பெற்றுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் “ஆலய தரிசனம் ” நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒலிபரப்பாக இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (4-6)

# வவு. பொது வைத்தியசாலைக்கு பணிப்பாளர் நியமனம்

(கண்டாவளை)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளராக வைத்தியர் கலைநாதன் ராகுலன் தனது கடமைகளை நேற்று முன்தினம் பொறுப்பேற்றுக்கொண்டார்.

முன்னர் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளராக கடமைகளை ஏற்று சிறப்பாக செயற்பட்டிருந்ததோடு, மக்களுக்கு திருப்திகரமான சேவையை வழங்கும் வைத்தியசாலையாக மாற்றுவதில் பெரும்பங்காற்றியவர். தற்போது வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதுடன் வவுனியா முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான கொரோனாத் தடுப்பு இணைப்பாளராகவும் செயற்படுவது குறிப் பிடத்தக்கது. (4-6,250,281,299,315)

# பலத்த காற்றினால்
## அறுந்து வீழ்ந்த மின் வடங்கள்

(குப்பிழான்)

யாழில் வீசி வரும் பலத்த காற்றால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஊரெழு கிழக்கு முதலாம் குறுக்குத் தெரு வீதியின் ஒரு பகுதி மின் வடங்கள் அறுந்து விழுந்தன. இதனையடுத்து மேற்படி பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டமையால் அப்பகுதியில் வாழும் சுமார் -50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மின்சாரமின்றிப் பாதிக்கப்பட்டனர்.

இதேவேளை, மின் இணைப்பைச் சீர்செய்து விரைவில் தமது பகுதிக்கான மின்சாரத்தை வழமைக்கு கொண்டுவர மின்சார சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-6,18)

# தடுப்பூசி வழங்கலில் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுக்கு முன்னுரிமை வேண்டும்

(அக்கராயன் )

கொரோனா தடுப்பூசி வழங்கலில் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டம், மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை பொறுத்தவரை அதிக தொற்றாளர்கள் ஆடைத் தொழிற்சாலைகளில் இருந்தே அடையாளப்படுத்தப்படுகின்றனர். இருந்தபோதும் நாட்டின் பொருளாதார நிலைமைகளை காரணம் காட்டி குறித்த தொழிற்சாலைகளை பதின்நான்கு நாட்களுக்கு கூட மூட முடியாத நிலை காணப்படுகின்றது. இந்நிலையில் தொழில் வழங்குநர்களுடன் பேரம்பேசும் ஆற்றல் அற்ற தொழிலாளர்கள் தொற்று தமக்கும் ஏற்பட்டு விடும் என்ற பயத்துடனும் வேலைக்கு செல்லாவிடின் தொழிற்சாலை நிர்வாகம் வேலையால் தம்மை நிறுத்திவிடும் என்கின்ற நிலையில் தொடர்ச்சியாக பய பீதியுடன் வேலைக்கு செல்கின்ற நிலைமை காணப்படுகின்றது. இந்த நிலையை மாற்றி விருப்பத்துடனும் பாதுகாப்பாகவும் வேலை செய்யும் ஆற்றலை அதிகரிக்க வேண்டுமாயின் எதிர்வரும் நாட்களில் வழங்கப்பட உள்ள தடுப்பூசிகளில் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் வழங்குவதன் ஊடாக கொரோனா நோய் சவாலுடன் பொருளாதார ரீதியான சவாலையும் சமாந்தர ரீதியில் எதிர்கொள்ள முடியும் என எண்ணுவதாக தெரிவித்தார். (4-6,350)



# காரைநகரில் ஒரு பகுதியை முடக்கத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் ஒரு பகுதியினை முடக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ் அரச அதிபர் மகேசன் தெரிவித்தார். காரைநகரில் ஒரு கிராமத்தினை தனிமை படுத்துவதற்கு அனுமதி கோரி கொரோனா தடுப்பு மத்திய நிலையத்திற்கு விண்ணப்பம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட காரைநகர் ஜே47 கிராம சேவகர் பிரிவில் சயம்பு வீதி உள்ளடங்கலான ஒரு பகுதியில் அதிக அளவிலான தொற்றாளர்கள் இனங் காணப்பட்டதையடுத்து அந்த பகுதியினை முடக்குவதற்கு விண்ணப்பத்தினை சுகாதாரப் பிரிவினரால் யாழ்மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டது குறித்த விண்ணப்பம் அரசாங்க அதிபரினால் சிபார்சு செய்யப்பட்டு மத்திய நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் எனினும் அப்பகுதியைச் சேர்ந்த 60இக்கும் மேற்பட்ட குடும்பங்கள் சுயதனிமைப் படுத்தப்பட்டுள்ளதாகவும் தனிமைப் படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு இடர்கால நிவாரண உதவியும் வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார். (4-6,33)



# கடும் காற்றினால் யாழில் 46 குடும்பங்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் கடும் காற்றுடன் கூடிய காலநிலை தாக்கத்தின் காரணமாக 46 குடும்பங்களைச் சேர்ந்த 172 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட அனர்த்த மாவட்ட பிரிவின் உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜா தெரிவித்தார்.

கடந்த 24 மணி நேரத்தில் யாழ்ப்பாணத்தில் வீசிய கடும் காற்றின் தாக்கத்தின் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் கருத்துரைக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த பாதிப்புக்கள் தொடர்பில் அனைத்து விவரங்களும் பிரதேச செயலகங்கள் ஊடாக சேகரிக்கப்பட்டு மத்திய அனர்த்த முகா மைத்துவ பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளதாகவும் தெரி வித்தார்வேலணை, காரைநகர், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அதி களவு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (4-6,33)

# யாழிலும் களமிறங்கிய ரோன்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் பயணத் தடை அமுலில் உள்ள வேளையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பொதுமக்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தும் முகமாக யாழ்ப்பாணப் பொலிசார் மற்றும் இலங்கை விமானப் படையினரும் இணைந்து ரோன் கமராவின் உதவியுடன் கண்காணிப்பு நடவடிக்கையில். (4-6,33)






# அதிபுத்திசாலி மன்னரும் அப்பிராணி அமைச்சரும்

"என்ன அப்பிராணியாரே, என்னைப் பற்றி எடுத்துச்சொல்ல வேண்டியதெல்லாம் மரம், செடி, கொடிகளுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறீரா? எந்த அளவில் உள்ளது அந்தப் பணி?" என்றார் மன்னர் குய்யோமுறையோ.

"மன்னா, நான் நினைத்ததைவிட அவை வெகு விரைவில் உங்களைப் புரிந்துகொண்டு விட்டன."

"அப்படியா!"

"ஆமாம் மன்னா, இப்பொழுதே என்னுடன் தோட்டத்துக்கு வாருங்கள், அவை எல்லாம் உங்கள் காலடியில் விழுந்து வணங்கும்."

இப்படிச் சொன்னவுடன் மன்னருக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அவையிலிருந்த மற்றவர்களோ பயத்தில் அப்பிராணியாருக்குப் புத்தி பேதலித்து விட்டது என்றே எண்ணினார்கள்.

தோட்டத்துக்குள் நுழையும் முன் மன்னரை நிறுத்திய அப்பிராணியார், "மன்னா, இதை அணிந்து கொண்டு நுழையுங்கள்" என்று பட்டுத் துணியில் சுற்றி வைத்திருந்த காலணிகளை எடுத்துக் கொடுத்தார்.

வேலைப்பாடு நிறைந்த அந்தக் காலணிகளின் மேல் புறத்தில் முகம் பார்க்கும் கண்ணாடி பதிக்கப்பட்டிருந்தது.



அதை அணிந்துகொண்டு மன்னர் தோட்டத்துக்குள் நுழைந்த உடன் வானம் அவரது காலணியில் இருந்த கண்ணாடியில் தெரிந்தது, அதைச்சுட்டிக்காட்டிய அப்பிராணியார், "மன்னா, அதோ பாருங்கள் வானம். உங்கள் காலடியில் விழுந்து வணக்கம் சொல்கிறது" என்றார்.

மன்னருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. மரத்தின் பக்கம் போய் நின்றார். மரத்தின் உருவமும் அவர் காலணிகளின் காண்ணாடியில் பிரதிபலித்தது.

இப்படியே செடி, கொடிகள் எல்லாம் மன்னர் காலடியில் வணக்கம் தெரிவிக்க, மகிழ்ந்து போனார் மன்னர் குய்யோமுறையோ.

இதைச் சாதித்த அப்பிராணியாருக்குப் பொன்னும் பொருளும் வழங்கினார்.

(முற்றும்)

# மகாபாரதம்




## முதலாம் நாள் போர்

முதலாம் நாள் போர் சங்குல யுத்தம் என அழைக்கப்படுகிறது. ஓர் ஒழுங்குக்கு உட்படாமல் முறை கெடப் போரிடல் "சங்குல யுத்தம்" ஆகும்.

இரு திறத்துப் படைகளும் மோதின. வீரர்கள் சிங்கம் போல கர்ஜித்தனர்.

யானைப்படையும் குதிரைப்படையும்மூர்க்கத்தனமாக மோதிக் கொண்டன. அதனால் எழுந்த தூசு விண்ணை மறைத்தது.

வீரர்கள் ஈட்டி, கத்தி, கதை, வளைதடி, சக்கரம் முதலிய கொண்டு போரிட்டனர்.

பீஷ்மர் வீராவசத்தோடு போர்புரிந்து எண்ணற்ற வீரர்களைக் கொன்றார். சுவேதனுடன் அவர் போர் பயங்கரமாய் இருந்தது. பீஷ்மரால் அவன் கொல்லப்பட்டான். அவன் மரணம் பாண்டவ வீரர்களை நடுங்க வைத்தது.

கௌரவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

## இரண்டாம் நாள் போர்

முதலாம்நாள்போரில் உத்தரனும் சுவேதனும் கொல்லப்பட்டதால் அதை மனதில் கொண்டு இரண்டாம் நாள் போர் படைகள் திருத்தி அமைக்கப்பட்டன.

கிரௌஞ்சப் பறவை வடிவில் படைகளை அமைப்பதால் அதற்கு கிரௌஞ்ச வியூகம் என்று பெயர். துருபத மன்னன் அதற்குத் தலையாக நின்றான்.

தருமர் பின் புறத்தில் நின்றார். திருஷ்டத் துய்மனும் பீமனும் சிறகுகளாக இருந்தனர். அந்த வியூகத்தை எளிதில் உடைத்து உள்ளே சென்று போரிட்டார் பீஷ்மர்.

கண்ணபிரான் தேரை ஓட்ட அருச்சுனன் பாட்டனாரைப் பயங்கரமாக தாக்கினான். பீஷ்மர், அருச்சுனன் மீது எழுபத்தேழு அம்புகளை செலுத்தினார்.

(தொடரும்)

### யானை தாக்கியதாலேயே

# கிராம அலுவலகரும் அவரது மனைவியும் உயிரிழப்பு

## மரண விசாரணையில் தெரிவிப்பு



(பூநகரி)

பூநகரி, ஜெயபுரத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நிர்வாகக் கிராம அலுவலகரும் அவரது துணைவியும் யானை தாக்கியதிலேயே உயிரிழந்துள்ளனர் என்று மரண விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் துயரச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

சம்பவத்தில் நயினாதீவைப் பிறப்பிடமாகவும் முழங்காவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பூநகரி பிரதேச செயலக நிர்வாகக் கிராம அலுவலகர் பாலசிங்கம் நகுலேஸ்வரன் (வயது-52) மற்றும் அவரது மனைவி சுனித்தா (வயது-50) ஆகிய இருவருமே உயிரிழந்தனர்.

கிராம அலுவலகர் சம்பவ இடத்திலும் அவரது மனைவி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையிலும் உயிரிழந்தனர்.

கிராம அலுவலகரின் மனைவியின் மரண விசாரணை மற்றும் உடற்கூற்றுப் பரிசோதனை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது.

யானை தாக்கியதற்கான அடையாளங்கள் உடலில் காணப்பட்டதாக திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் முன்னிலையில் இடம்பெற்ற விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (ம -3,33)

# நெல்லியடிப் பகுதியில் மூவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால் நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்ட அன்டியன் பரிசோதனையில் நெல்லியடி மதுபானக் கடை காசாளர், நெல்லியடி வடைக் கடையில் விற்பனை உதவியாளர் மற்றும் கரணவாய் அண்ணாசிலையடிப் பகுதியில் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று நேற்றையதினம் உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

# பனை முறிந்து விழுந்ததில் முச்சக்கரவண்டி சேதம்

## கந்தரோடையில் சம்பவம்

(கந்தரோடை)

பலத்த காற்றுக் காரணமாக பனைமரம் திடீரென முறிந்து விழுந்ததில் முச்சக்கரவண்டியொன்று கடும் சேதங்களுக்கு உள்ளானது. குறித்த சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை கந்தரோடை உபாத்தியாயர் வீதியில் இடம்பெற்றது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, யாழில் தொடர்ச்சியாக வீசிய பலத்த காற்றுக்காரணமாக நேற்று முன்தினம் முற்பகல் மேற்படி வீட்டிற்குப் பக்கத்து வளவில் நின்றிருந்த பனைமரம் திடீரென முறிந்து விழுந்தது. இதனால்,



குறித்த வீட்டிற்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டி கடும் சேதங்களுக்கு உள்ளானது.

இதேவேளை, பனைமரம் முறிந்து விழுந்தபோது சிறுவன் ஒருவன் அங்கு நின்றிருந்த போதும் தெய்வாதீனமாக சிறுவனுக்குப் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-03,18)

### வெசாக் தினத்தை முன்னிட்டு

# 240 சிறைக் கைதிகள் பொது மன்னிப்பில் விடுதலை

(கொழும்பு)

வெசாக் போயா தினத்தை முன்னிட்டு நேற்று 240 சிறைக் கைதிகள் ஜனாதிபதியால் பொது மன்னிப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டதாக சிறைச்சாலை செய்தித் தொடர்பாளர் சந்தனா ஏக்கநாயக்க தெரிவித்தார்.

விடுவிக்கப்பட்ட அனைவரும் சிறு குற்றங்களுடன் தொடர்புடையவர்கள். அத்துடன், 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் சிறைத் தண்டனையின் பாதிக்கும் மேற்பட்ட தண்டனைக் காலத்தை நிறைவு செய்தவர்கள் எனவும் அவர் கூறினார். (ம-03)

# மரண அறிவித்தல்

தோற்றம் 24 - 02 - 1959



மறைவு 23 - 05 - 2021

## திரு. ஞானரத்தினம் பரமேஸ்வரன் (பரமசிவம்)

*சங்கானையைப் பிறப்பிடமாகவும் சுவிஸ்சர்லாந்தை வதிவிடமாகவும் கொண்ட திரு. ஞானரத்தினம் பரமேஸ்வரன் (பரமசிவம்) கடந்த 23.05.2021 (ஞாயிற்றுக்கிழமை) அன்று சுவிஸ்சர்லாந்தில் அகால மரணமடைந்தார்.*

*அன்னார் காலஞ்சென்ற ஞானரத்தினம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் யோகநாதன் - தவமணி தம்பதியரின் அன்பு மருமகனும் சியாமளாதேவியின் பாசமிகு கணவரும் சாமினியின் அன்புத் தந்தையும் தேவராணி, கனகலிங்கம், கிருஸ்ணவேணி ஆகியோரின் அன்பு சகோதரனும் கருணாகரன், சுதாகரன், கோகிலம், அருணாநிதி (சுமதி), சுபத்திரா ஆகியோரின் மைத்துனரும் நாகேந்திரம், சந்திரதாஸ், திலகவதி, பிரதீகா ஆகியோரின் சகலனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.05.2021) சுவிஸ்சர்லாந்தில் நடைபெறும்.*

*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

(இ)

நல்லூர்

தகவல்:-
யோகநாதன் குடும்பம்

### தும்பளையில் மரணச் சடங்கு

# பூசகர் உள்ளிட்ட பலர் தனிமைப்படுத்தலில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை - தும்பளையில் வங்கி முகாமையாளரின் தந்தையின் மரணச் சடங்கில் கலந்துகொண்ட பூசகர் உள்ளிட்டோரை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காலமானவரின் மகன் யாழ்ப்பாணத்தில் வங்கி ஒன்றில் பணியாற்றுகின்றார். அவருக்கு பி.சி.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டிருந்தன.

அதன் பெறுபேறுகள் நேற்று முன்தினம் மாலை கிடைக்கப்பெற்றபோது அவருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

இந்த நிலையில் வங்கியாளரின் தந்தை காலமாகிய நிலையில் இறுதிச் சடங்கு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

அதனால் வங்கியாளரின் தந்தையின் இறுதிச் சடங்கில் பங்கேற்றவர்கள், கிரியை செய்த பூசகர் உள்ளிட்டோரைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கையை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் முன்னெடுத்துள்ளனர். (ம-3)

# கொரோனா தொற்றுக்குள்ளான சிறைக் கைதி தப்பியோட்டம்

## கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த கொரோனாத் தொற்றுக்குள்ளான சிறைக் கைதி ஒருவர் நேற்றுக் காலை வைத்தியசாலையிலிருந்து தப்பி ஓடியுள்ளார்.

இயக்கச்சி கொரோனா சிகிச்சை நிலையத்தில் தங்கியிருந்த வெளிமாவட்டத்தைச் சேர்ந்த சிறைச்சாலை ஒன்றின் கைதியே இவ்வாறு தப்பி ஓடியுள்ளார்.

தனக்கு கடும் நெஞ்சுவலி என்று அவர் தெரிவித்ததன் அடிப்படையில் நேற்றைய தினம் அவர் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவர் நேற்றுக் காலை வைத்தியசாலையிலிருந்து தப்பி ஓடியுள்ளதாக வைத்தியசாலை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (ம-03,100)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.05.2021 இல் வெளியிடப்பட்டது.